# விடுதிகளில் தங்கியிருக்கும் முதலாம் வருட மாணவர்களுக்கான வழிகாட்டல்கள்

## பேராதனைப் பல்கலைக்கழகம்

முதலாம் வருட மாணவர்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அன்புடன் வரவேற்கின்றோம். மிகவும் சிக்கலான காலங்களில் உங்களைச் சௌகரியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்குப் பல்கலைக்கழகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றது.

உங்களுக்கு வழங்கப்பட்ட விடுதிக்கு வந்தடைந்த முதலாவது நாள் விடுதிக்காப்பாளர், துணை விடுதிக்காப்பாளர், மற்றும் விடுதியில் தங்கியுள்ள அனைத்து கல்விசார் ஊழியர்களின் பங்கேற்புடன் ஒரு கூட்டம் நடைபெற்று, நீங்கள் தங்கியிருக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் அறிவுறுத்தப்படும்.

பேராதனையில் தங்கியிருக்கும் புதிய மாணவர்கள் பின்வரும் விதிமுறைகளை முதல் மூன்று மாதங்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

- நீங்கள் விடுதியிலிருந்து காலை 7 மணிக்கு முன்பாக வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டீர்கள்.
- உங்களுடைய கல்வி நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு மாலை 6 மணிக்கு முன்பதாக விடுதிக்குக் கட்டாயமாகத் திரும்பவேண்டும்
- குறிப்பாக வார இறுதி நாட்களிலோ அல்லது பொதுவிடுமுறை தினங்களிலோ உங்களுடைய வீடுகளிற்கு அல்லது ஏனைய இடங்களிற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
- உங்களுடைய கல்வி நடவடிக்கைகள் முடியும் வரை நீங்கள் விடுதியில் தங்கியிருக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். விடுதியிலிருந்து வெளியேறுவதற்கான அனுமதி பீடாதிபதியினால் வழங்கப்பட்ட பின்னர் நீங்கள் வெளியேறலாம்.
- மேற்கண்ட விதிகளை மீறிச் செயற்படும் மாணவர்கள் விடுதிக்குத் திரும்பியதும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.
- பல்கலைக்கழக நேரத்தில் (காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை) பல்கலைக்கழக வளாகத்திலோ அல்லது பல்கலைக்கழகத்திற்கு வெளியே வேறு எந்த இடத்திலோ இடம்பெறும் சிறப்பு நிகழ்வுகளில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டுமாயின் பீடாதிபதி மற்றும் விடுதிக்காப்பாளர், துணை விடுதிக்காப்பாளர் ஆகியோரிடம் எழுத்து பூர்வமாகக் கோரிக்கையை முன்வைத்து அதற்கான அனுமதியைக் கட்டாயமாகப் பெற்றிருக்கவேண்டும்.

## கொவிட்–19ஐ தடுத்தல்

- கொவிட்-19 தடுப்பிற்காகப் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து சுகாதார விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றி நடத்தல் வேண்டும். பல்கலைக்கழகத்திலுள்ள சுகாதார நிலையத்தினால் வெளியிடப்பட்ட கொவிட்-19 தடுப்பு வழிகாட்டுதல்களை விடுதிகளினுடைய பொது இடங்களில் பின்பற்றுதல் வேண்டும்.

- நீங்கள் எப்போதும்,
    - ✓ தூய்மையான மற்றும் பொருத்தமான முகக்கவசத்தை அணிதல் வேண்டும்.

- ✓ குறைந்தது 1 மீற்றர் தூர இடைவெளியைப் பின்பற்ற வேண்டும்.
- ✓ அடிக்கடி சவர்க்காரமிட்டு கைகளை நன்கு கழுவுதல் வேண்டும்.
- ✓ கண்கள், மூக்கு, வாய் முதலிய உறுப்புக்களைத் தொடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ✓ விடுதி அறைகளில் ஏனைய மாணவர்களுக்குச் சொந்தமான பொருட்களைப் பயன்படுத்துவதை அல்லது பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ✓ உணவு மற்றும் குடிபானங்களைப் பகிர்ந்து கொள்வதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

- விடுதியினுடைய பொது இடங்களில் அமர்வதற்கோ, உணவு உண்பதற்கோ உங்களுக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. விடுதிச் சிற்றுண்டிச்சாலையிலிருந்து உணவைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உங்கள் அறைகளில் இருந்து உணவருந்திக் கொள்ளலாம்.

- உங்களுடைய, தனிப்பட்ட பயன்படுத்தலுக்காகத் தண்ணீர்ப் போத்தல்கள், தேநீர்க் கோப்பைகள் மற்றும் உணவுத்தட்டுக்கள் போன்றவற்றை வைத்திருப்பது கட்டாயமானதாகும். சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களால் உணவுத்தட்டுக்கள் மற்றும் தேநீர்க் கோப்பைகள் என்பன வழங்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

- நீங்கள் காய்ச்சல், தடிமன், தீவிரமான தலைவலி அல்லது ஏதேனும் சுவாசப் பிரச்சினைகளான மூக்கால் நீர் வடிதல், தும்மல், தொண்டை வரட்சி, சுவாசித்தலில் சிரமம் போன்ற அறிகுறிகள் இருப்பின் உடனடியாக விடுதிக்குப் பொறுப்பான அலுவலகர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

- நீங்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விடுதிக்காப்பாளர், உப விடுதிக்காப்பாளர் சட்ட ஒழுக்காற்று அதிகாரி (Proctor), தலைமை ஒழுக்காற்று அதிகாரி, ஒழுக்காற்று அதிகாரி, சுகாரதார நிலைய உத்தியோகத்தர்கள் போன்றோரால் பரிந்துரை செய்யப்பட்ட பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்
    - விடுதியில் தனிமைப்படுத்தல்
    - பீ.சி.ஆர் சோதனை
    - தனிமைப்படுத்தல் அல்லது ஏனைய சுகாதாரச் செயன்முறைகள்

- விடுதி அலுவலகர்கள், பாதுகாப்பு அலுவலக உத்தியோகத்தர்கள்/ ஒழுக்காற்று அதிகாரி அல்லது பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் போன்றோரின் அறிவுறுத்தலின்படி நடந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் சுகாதார அமைச்சின் சுகாதாரச் சேவைப் பிரிவுக்கு அனுப்பப்படுவீர்கள்.

- தங்களுக்கோ அல்லது தங்கள் அறையில் உள்ளவருக்கோ கொவிட் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமாயின், அதனைப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறியத்தராது இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு செய்தால் தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவிடத்து தங்களுக்கான விடுதி வசதிகள் இரத்துச் செய்யப்படும் என்பதனையும் இத்துடன் அறியத்தருகின்றோம்.

## விடுதியில் வசிப்பவர்களுக்கான ஏனைய விதிமுறைகள்

- காலை உணவு, இரவு உணவு ஆகியவற்றை விடுதி உணவகத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும்.
- குழுவாகச் சேர்ந்து உணவு உண்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. உங்கள் அறைகளில் இருந்து உணவு உண்பதற்கு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
- வெளியில் இருந்தும், பிற உணவகங்களில் இருந்தும் உணவைப் பெறுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.
- பொதுக்கூட்டம், கலந்துரையாடல், குழு விளையாட்டுக்கள், குழுவாகவிருந்து கற்றல் இவை போன்ற செயற்பாடுகளுக்காக அதிக எண்ணிக்கையானோர் ஓர் இடத்தில் ஒன்று கூடுவதற்குக் அனுமதிவழங்கப்படமாட்டாது.

**குறிப்பு : விடுதியில் தங்குவதற்காக விதிக்கப்பட்ட பிற விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் மாற்றப்படமாட்டாது என்பதை நினைவில் கொள்ளவும்.**

பிரதித் துணைவேந்தர் / பேராதனைப் பல்கலைக்கழகம்.